முன்னதாக, தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூவிடம் இதுகுறித்து கேட்டபோது, "தேர்தல் நடத்தை விதிகள் ஜூன் 6 வரை நடைமுறையில் இருக்கும் என தேர்தல் ஆணையம் தெரிவித்த நிலையில், வேறு எந்த உத்தரவும் வராததால், விதிகள் விலக்கிக் கொள்ளப்படும்" என்றார்.

முன்னதாக, தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக ஒருவர் ரூ.50 ஆயிரத்துக்கு அதிகமாக பணம் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது. அதிக மதிப்புள்ள பொருட்கள் கொண்டு செல்லவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுக்கள், வீடியோ கண்காணிப்பு குழுக்கள் மற்றும் வருமான வரித்துறையினரின் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு, தொடர் சோதனைகள் நடத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில், தேர்தல் நடைமுறைகள் நேற்று நள்ளிரவுடன் திரும்ப பெறப்பட்டன. இனி பணம், பொருட்கள் கொண்டு செல்வதில் எந்தவித கட்டுப்பாடும் இருக்காது. அதுமட்டுமின்றி, அரசு வழக்கமான பணிகளை இன்று முதல் மேற்கொள்ளலாம். புதிய திட்டங்கள் அறிவிப்பது, நிதி உதவி அறிவிப்பது, திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வழிவகை ஏற்பட்டுள்ளது.

Lok Sabha Election procedures completed. Codes of conduct were withdrawn. The Goverament can continue its routine work.

The Hindu (Tamil)
Dated: 07-06-2024

விஜய பிரபாகரனை தோற்கடிக்க சூழ்ச்சி நடந்ததாக பிரேமலதா குற்றச்சாட்டு

# விருதுநகரில் மறு வாக்கு எண்ணிக்கை நடத்த தேர்தல் ஆணையத்தில் தேமுதிக மனு

● சென்னை

விருதுநகர் தொகுதியில் பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளதால் அங்கு மறு வாக்கு எண்ணிக்கை நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தில் தேமுதிக மனு கொடுத்துள்ளது.

இதுகுறித்துசென்னைகோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா நேற்று கூறியதாவது:

விருதுநகரில் மொத்தம் 10.61 லட்சம் ஓட்டுகள் பதிவாகியுள்ளன. அதில் விஜய பிரபாகரன் 4,379 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்ததாக கூறுகின்றனர். தபால் வாக்குகள் எண்ணப்பட்டதற்கு பிறகுதான் விஜய பிரபாகரன் 0.4 சதவீத வித்தியாசத்தில் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்திருந்தால் ஒப்புக்கொண்டு இருப்போம். ஆனால், திட்டமிட்டு சூழ்ச்சியால் அவரை தோல்வியடைய செய்துள்ளனர். அதற்கான ஆதாரங்கள் உள்ளன.

### ஆட்சியருக்கு நிர்பந்தம்

வாக்கு எண்ணிக்கையின்போது மாலை 3 முதல் 5 மணி வரை 2 மணி நேரம் வாக்கு எண்ணிக்கை நிறுத்தப்பட்டது. அதற்கான காரணம் கூறப்படவில்லை. பல்வேறு தரப்பிலும் இருந்து தனக்கு நிர்பந்தங்கள் அதிகமாக இருக்கிறது. தன்னால் சமாளிக்க முடியவில்லை. செல்போனை சுவிட்ச் ஆஃப் செய்யப் போகிறேன் என்று தேர்தல் அலுவலரான மாவட்ட ஆட்சியர் கூறுகிறார். அவரை செயல்படவிடாமல் தடுத்தது யார்?



கோயம்பேடு தேமுதிக அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் நேற்று பேசிய பொதுச் செயலாளர் பிரேமலதா. உடன் விருதுநகர் தொகுதி வேட்பாளர் விஜய பிரபாகரன். படம்: ம.பிரபு

தேர்தல் முடிவு அறிவிக்கும் முன்பாகவே, 40 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வென்றது என்று முதல்வர் கூறினார். எதன் அடிப்படையில் இவ்வாறு கூறினார் என்பதை முதல்வர் விளக்க வேண்டும்.

வாக்கு எண்ணிக்கையின்போது தவறு நடப்பதாக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி முறையிட்டார். தேமுதிக, அதிமுக நிர்வாகிகள் வாக்கு எண்ணிக்கையை நிறுத்த வேண்டுமென வலியுறுத்தினர். ஆனால், அதை அதிகாரிகள் ஏற்கவில்லை.

எனவே, விருதுநகரில் மறு வாக்கு எண்ணிக்கை கோரி தேர்தல் ஆணையத்துக்கு மின்னஞ்சலில் புகார் அளித்துள்ளோம். தேர்தல் ஆணையம் எடுக்கும் முடிவை பொருத்து அடுத்தகட்ட நடவடிக்கையில் இறங்குவோம். அதிமுக – தேமுதிக கூட்டணி வரும் காலங்களிலும் தொடரும்.

இவ்வாறு அவர் கூறினார். தேமுதிக செயலாளர் எல்.கே.சுதீஷ், விஜய பிரபாகரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

இந்நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹுவிடம் தேமுதிக வழக்கறிஞர் ஜனார்த்தனன் நேற்று ஒரு புகார் மனு கொடுத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், "விருதுநகர் மக்களவை தொகுதியில்வாக்குஎண்ணிக்கையின்போதுமுறைகேடுகள் நடந்ததாக குறிப்பிட்டு, தேர்தல் ஆணையத்துக்கு புகார் அனுப்பியுள்ளோம். அப்போதே தமிழக தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் விருதுநகர் தேர்தல் நடத்தும் அலுவலருக்கும் புகார் மனு அனுப்பினோம். தங்களுக்கு மனு வரவில்லை என்று கூறியதால் நேரடியாக அளித்துள்ளோம். டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையத்திடமும் நேரடியாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. மனு மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்காவிட்டால், நீதிமன்றத்தை அணுகுவதை தவிர வேறு வழியில்லை" என்றார்.

இந்நிலையில், தேர்தல் ஆணைய உத்தரவின்படி இதில் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு நேற்று தெரிவித்துள்ளார்.

DMDK petition to Election commission seeking re-counting in Virudhunagar constituency

The Hindu (Tamil)
Dated: 07.06.2024

# தேர்தல் நடத்தை விதிகள் நாடு முழுதும் வாபஸ்



தலைமை தேர்தல் கமிஷனர் ராஜிவ் குமார் மற்றும் துணை கமிஷனர்கள் கியானேஷ் குமார், சுக்பீர்சிங் சந்து ஆகியோர் ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து, 18வது லோக்சபாவுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.பி.,க் களின் பட்டியலை வழங்கினர். **இடம்:** ஜனாதிபதி மாளிகை, புதுடில்லி.

**புதுடில்லி, ஜூன் 7–**

லோக்சபா தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியான நிலையில், நாடு முழுதும் அமலில் இருந்த தேர்தல் நடத்தை விதிகளை விலக்கிக் கொள்வதாக தேர்தல் கமிஷன் நேற்று அறிவித்தது.

தேர்தலை நியாயமான முறையில் நடத்தவும், அதில் மத்திய, மாநில அரசுகளின் அதிகாரம் பயன்படுத்தப்படுவதை தடுக்கவும், ஒவ்வொரு தேர்தலின் போதும் நடத்தை விதிகள் அமல்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில், மத்திய அமைச்சரவை செயலர் மற்றும் மாநில தலைமை செயலர்களுக்கு தேர்தல் கமிஷன் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், 'லோக்சபா தேர்தல் மற்றும் சிக்கிம், அருணாச்சல், ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில் சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளியாகி விட்டதால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்படுகின்றன.

'இது உடனடியாக அமலுக்கு வருகிறது' என கூறியுள்ளது.

இதைத் தொடர்ந்து, தலைமை தேர்தல் கமிஷனர் ராஜிவ் குமார் மற்றும் துணை கமிஷனர்கள் ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர்சிங் சந்து ஆகியோர் நேற்று ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள லோக்சபா எம்.பி.,க்களின் பட்டியலை வழங்கினர்.

Model code of conduct were withdrawn through out the country – ECI, New Delhi

தினத்தந்தி

7 JUN 2024

தி.மு.க. எம்.எல்.ஏ. மரணம்:

# விக்கிரவாண்டி தொகுதிக்கு விரைவில் இடைத்தேர்தல்

## தேர்தல் ஆணையம் நடவடிக்கை

சென்னை, ஜூன்.7-

தி.மு.க. எம்.எல்.ஏ. மரணம் அடைந்ததையடுத்து, விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கான நடவடிக்கையில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது.

### தி.மு.க. எம்.எல்.ஏ. மரணம்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் 6-ந் தேதி மரணம் அடைந்தார். எனவே அந்த தொகுதிக்கு நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் போதே இடைத்தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 7 கட்ட நாடாளுமன்ற தேர்தலும் நடந்து முடிந்து தற்போது வாக்கு எண்ணிக்கையும் முடிந்துவிட்டது. ஆனால் விக்கிரவாண்டி சட்டசபைதொகுதிக்கு தேர்தல் நடைபெறவில்லை. இதுகுறித்து தேர்தல் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

### அறிவிப்பு

தமிழக நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்புதான் விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. மரணம் அடைந்தார். எனவேதான் தமிழக நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும்போது அந்த தொகுதியையும் சேர்த்து இடைத்தேர்தல் நடைபெறவில்லை. ஒரு தொகுதி காலியான பிறகு 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும்.

அதன்படி இந்த தொகுதியில் தேர்தல் நடத்த வருகிற ஆகஸ்டு மாதம் வரை அவகாசம் இருக்கிறது. இருப்பினும் முன்னதாகவே தேர்தல் நடத்த ஆணையம் முடிவு செய்துள்ளது. அதன்படி இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் தொடக்கத்தில் அதற்கான அறிவிப்பு வெளிவந்து விடும்.

இவ்வாறு அவர் கூறினார்

### ரேபரேலி

மேலும் தற்போது நடந்து முடிந்துள்ள 543 நாடாளுமன்ற தொகுதிகளில் ராகுல் காந்தி கேரள மாநிலம் வயநாடு, உத்தரபிரதேச மாநிலம் ரேபரேலி என 2 தொகுதிகளில் வெற்றி பெற்று இருக்கிறார். அதில் அவர் ஒரு தொகுதியில் மட்டுமே பதவியேற்பார்.

எனவே மற்றொரு தொகுதி காலியானதாக அறிவிக்கப்படும். எனவே விக்கிரவாண்டி இடைத்தேர்தலுடன், இதில் காலியாகும் ஒருதொகுதிக்கும் தேர்தல் நடைபெறும்.

News regarding Bye-Election in Vikravandi constituency

தினத்தந்தி

7 JUN 2024

மறு வாக்கு எண்ணிக்கை கேட்டு தே.மு.தி.க. மனு:

# தேர்தல் தொடர்பான நிவாரணங்களுக்கு இனி கோர்ட்டையே நாட வேண்டும்

## தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம்

சென்னை, ஜூன்.7- தேர்தல் தொடர்பான நிவாரணங்களுக்கு இனி கோர்ட்டையே நாட வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கூறியுள்ளார்.

### தே.மு.தி.க. புகார்

சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு நேற்று சத்யபிரத சாகு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழகம் முழுவதும் எண்ணப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்களை அந்தந்த இடங்களில் இருந்து அப்புறப்படுத்தி அருகில் உள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்க உத்தரவிடப்பட்டது. அவை 45 நாட்கள் அங்கு வைக்கப்பட்டு இருக்கும். வேட்பாளர்கள் யாரும் தேர்தல் வழக்கு தொடர்வதற்கான காலஅவகாசமாக அவை 45 நாட்கள் பாதுகாப்பில் இருக்கும். தற்போது விருதுநகர் தொகுதியில் தே.மு.தி.க. வேட்பாளரிடம் இருந்து புகார்கள் வந்ததாக தெரியவந்துள்ளது. தேர்தல் நடவடிக்கைகள் முடிந்த பிறகு கோர்ட்டில் தேர்தல் வழக்குதான் தொடர முடியும். எனக்கு 'இ-மெயிலில்' புகார் அனுப்பி இருப்பதாக கூறினால், அதுபற்றி தெரியவில்லை, பார்க்க வேண்டும்.

கோர்ட்டில் யாரும் தேர்தல் வழக்கு தொடர்ந்தால் கோர்ட்டின் உத்தரவின்படி, அந்த குறிப்பிட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள், ஒப்புகைச்சீட்டு 'விவிபாட்' எந்திரங்களை பத்திரப்படுத்தி வைப்போம். தேர்தல் தொடர்பான எந்த ஒரு நிவாரணத்தைப் பெறவும் ஐகோர்ட்டு ஒன்றுதான் வழி. தேர்தல் கமிஷனிடம் புகார் கூறினாலும், பொதுவாக கோர்ட்டைதான் நாட வேண்டும்.

ஏனென்றால், மறு வாக்கு எண்ணிக்கைபோன்றவற்றிற்கு உத்தரவிட கோர்ட்டுக்குத்தான் அதிகாரம் உள்ளது. தேர்தல் நடவடிக்கைகள் முடிந்த பிறகு மறு வாக்கு எண்ணிக்கைக்கு தேர்தல் கமிஷன் உத்தரவு பிறப்பிக்காது. தேர்தல் கமிஷனிடம் அவர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அதன் உத்தரவுக்கு அவர்கள் காத்திருக்கலாம். தேர்தல் கமிஷன் உத்தரவிட்டால் அதை நிறைவேற்றுவோம்.

### அடுத்த இடைத்தேர்தல்

பறிமுதல் செய்யப்பட்ட பணம், பொருட்கள் உரிய ஆவணங்கள் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கும் பணி நடந்து வருகிறது. விக்கிரவாண்டி சட்டசபை இடைத் தேர்தலை 6 மாதத்துக்குள் நடத்தி முடிக்க வேண்டும். தேர்தல் கமிஷன் தான் இதுகுறித்து முடிவெடுக்கும்.

தேர்தல் நடைமுறைகள் நிறைவு பெற்றுவிட்டதால், ஏற்கனவே வாக்காளர் ப்பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்தவர்களின் மனுக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு, பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பெயர் சேர்ப்பு, நீக்கம் போன்றவற்றிற்கு தொடர்ந்து விண்ணப்பிக்கலாம். வாக்காளர் பட்டியலில் பெயர்கள் நீக்கம் தொடர்பாக புகார் வந்திருந்தால் வாக்காளர் பட்டியல் அலுவலர் நடவடிக்கை எடுப்பார். வாக்காளர் பெயர் நீக்கப்பட்டிருந்தால் அவர் விண்ணப்பித்து பட்டியலில் பெயரை சேர்க்க முடியும்.

இந்த தேர்தலில் வாக்கு சதவீதம் குறைந்தது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். வாக்கு சதவீதம் குறைந்த வாக்குச்சாவடிகளின் விவரத்தை கேட்டுள்ளோம். மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படும். தேர்தல் செலவு கணக்கு குறித்த ஆய்வு, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் நடைபெறும். எனவே, தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் மீண்டும் வந்து பணியாற்றுவார்கள்.

### வைப்பறைகள்

70 சதவீத ஆதார் எண்கள், வாக்காளர்களிடம் இதுவரை பெற்றுள்ளோம். தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. 38 மாவட்டங்களில் 32 மாவட்டங்களில் மின்னணு வாக்கு எந்திரங்கள் பாதுகாக்கும் வைப்பறைகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை, ராணிப்பேட்டை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் மட்டும் வைப்பறைகள் கட்டப்பட வேண்டும். அந்த 6 மாவட்டங்களில் வைப்பறைகள் கட்டுவதற்கு அரசு நிதி ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

DMDK asked for re-counting. Courts should be sought for election related relief - say CEO, Tamil Nadu

தினத்தந்தி

7 JUN 2024

இந்தியா முழுவதும்

# தேர்தல் நடத்தை விதிகள் விலக்கப்பட்டன

## தேர்தல் கமிஷன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 7-

அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலாளர்களுக்கு இந்திய தேர்தல் கமிஷன் நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது:-

இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன.

தற்போது, அனைத்து மாநிலங்களிலும் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சில மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் மற்றும் இடைத்தேர்தல் ஆகியவை நடந்து முடிந்துவிட்டன. அதைத் தொடர்ந்து தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன.

எனவே நாடு முழுவதும் அமலில் இருந்த தேர்தல் நடத்தை விதிகள் அனைத்தும் உடனடியாக விலக்கிக் கொள்ளப்படுகிறது.

ஆனால் கர்நாடகா, மராட்டியம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் எம்.எல்.சி. பதவிக்கான பட்டதாரிகள், ஆசிரியர்கள் தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற இருப்பதால் அந்த தொகுதிகளில் மட்டும் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Codes of conduct were withdrawn all over the country - ECI, New Delhi

தினமலர்
7 JUN 2024

# தேர்தல் கமிஷன் கிடங்குகளில் ஓட்டுப்பதிவு இயந்திரங்கள்

**சென்னை, ஜூன் 7–**

''லோக்சபா தேர்தலில் பயன்படுத்தப்பட்ட ஓட்டுப் பதிவு இயந்திரங்கள், தேர்தல் கமிஷனுக்கு சொந்தமான கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்படும்,'' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஆறு மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களில் ஓட்டுப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பாக வைக்க, தேர்தல் கமிஷனுக்கு சொந்தமான கிடங்குகள் உள்ளன.



மேலும், புதிய மாவட்டங்களில் கிடங்குகள் கட்ட, அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசு அனுமதி கிடைத்ததும், கிடங்கு கட்டப்படும். லோக்சபா தேர்தலில் பயன்படுத்தப்பட்ட ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

தேர்தல் தொடர்பாக வழக்கு தொடர விரும்புவோர், 45 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம்.

அதுவரை ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் அப்படியே வைக்கப்படும். அதன்பின் நீதிமன்ற உத்தரவுகள் ஏதேனும் வந்தால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் நடவடிக்கைகள் நேற்றுடன் முடிவுக்கு வந்தன. எனவே, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்ற விரும்புவோர் விண்ணப்பம் அளிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

The voting machines used in the Lok Sabha Elections will be kept in warehouses for safety - CEO, Tamil Nadu

Dinamalar, Dated: 07.06.2024

# சூழ்ச்சியால் தோற்கடிக்கப்பட்டார் விஜயபிரபாகரன் விருதுநகர் கலெக்டர் மீது பிரேமலதா குற்றச்சாட்டு

**சென்னை, ஜூன் 7–**

''விஜயபிரபாகரன் சூழ்ச்சியால் தோற்கடிக்கப்பட்டு உள்ளார். எனவே, விருதுநகர் தொகுதியில் மறு ஓட்டு எண்ணிக்கையை விரைந்து நடத்த வேண்டும்,'' என, தே.மு.தி.க., பொதுச்செயலர் பிரேமலதா கூறினார்.

அவர் அளித்த பேட்டி:

விருதுநகரில் விஜயபிரபாகரன் தோல்வி அடையவில்லை; தோற்கடிக்கப்பட்டு உள்ளார். இதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. விருதுநகரில் மொத்தம் 10 லட்சம் ஓட்டுகள் வரை பதிவாகியுள்ளன. இதில், விஜயபிரபாகரனுக்கு 3.80 லட்சம் ஓட்டுகள் கிடைத்துள்ளன. காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்தாகூரிடம் 4,379 ஓட்டுகள் வித்தியாசத்தில், அவர் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.



பிரேமலதா

தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வெளியிட்ட, ஓட்டு எண்ணிக்கை முடிவுகள் தொடர்பான அறிவிப்புகளில் முரண்பாடுகள் இருந்துள்ளன.

அங்கு உணவு இடைவேளைக்கு நேரம் ஒதுக்கிய பின்னும், பிற்பகல் 3:00 மணி முதல் 5:00 மணி வரை ஓட்டு எண்ணிக்கை நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

'எனக்கு பல இடங்களில் இருந்து நிர்பந்தம் வருகிறது; என்னால் சமாளிக்க முடியவில்லை; போனை 'ஸ்விட்ச் ஆப்' செய்யப் போகிறேன்' என தேர்தல் நடத்தும் அதிகாரியான கலெக்டர் வெளிப்படையாகக் கூறியுள்ளார். அவரை செயல்படவிடாமல் தடுத்த சக்தி எது?

தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முன்பே, 40 தொகுதிகளில் வெற்றி பெற்றதாக, முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். அவர் அறிவித்த நேரத்தில், விருதுநகர் உள்ளிட்ட நான்கு தொகுதிகளில் ஓட்டு எண்ணிக்கை நடந்து கொண்டிருந்தது.

விருதுநகரில் நள்ளிரவு வரை ஓட்டு எண்ணிக்கை நடந்தது. முதல்வர் கூறிவிட்டதால், அதை உண்மையாக்க, மூன்று அமைச்சர்கள் சென்று அதிகாரிகளை நிர்பந்தம் செய்து, விருதுநகரில் காங்கிரஸ் வெற்றியை அறிவிக்க வைத்துள்ளனர்.

இதுகுறித்து அப்போதே தே.மு.தி.க., தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டு உள்ளது; பதில் இல்லை. எனவே, விருதுநகர் தொகுதியில் மறு ஓட்டு எண்ணிக்கையை விரைந்து நடத்த வேண்டும்.

முதல்முறை போட்டியிடும் ஒரு இளைஞரை ஜெயிக்க வைத்திருக்க வேண்டும். விஜயபிரபாகரன் சின்னப்பையன். அவனை பெரிய மனதோடு ஜெயிக்க வைத்திருந்தால், இந்த ஆட்சியை தலைவணங்கி வரவேற்று இருப்போம். ஆனால், வெற்றி பெறக்கூடாது என அதிகாரிகளை மிரட்டியுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 'கோர்ட்டுக்கு தான் போகணும்!'

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு கூறியதாவது:

தே.மு.தி.க., சார்பில் மறு ஓட்டு எண்ணிக்கை கோரி, தேர்தல் கமிஷனுக்கு மனு அனுப்பி உள்ளதாக, தகவல் வெளியாகி உள்ளது. தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கு, மனு எதுவும் வரவில்லை.

ஓட்டு எண்ணிக்கை முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின், மறு ஓட்டு எண்ணிக்கை கோரி, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை நாடலாம். நீதிமன்ற உத்தரவின்படி, தேர்தல் கமிஷன் செயல்படும். தேர்தல் புகார் தொடர்பாக, 45 நாட்களுக்குள் நீதிமன்றம் செல்ல வேண்டும்.

அதுவரை ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் அப்படியே பாதுகாக்கப்படும். அதன்பின், நீதிமன்றம் ஓட்டுப்பதிவு இயந்திரத்தை பாதுகாக்கும்படி உத்தரவிட்டால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தேர்தல் கமிஷனில் தே.மு.தி.க., மனு

'விருதுநகர் லோக்சபா தொகுதியில், ஓட்டு எண்ணிக்கையில் முறைகேடு நடந்துள்ளதால், மறு ஓட்டு எண்ணிக்கைக்கு உத்தரவிட வேண்டும்' என, தே.மு.தி.க., சார்பில், தேர்தல் கமிஷனில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில், புகார் மனு அளித்த பின், தே.மு.தி.க., வழக்கறிஞர் ஜனார்த்தனன் கூறியதாவது:

விருதுநகர் தொகுதியில், ஓட்டு எண்ணிக்கையின்போது நிறைய முறைகேடு நடந்துள்ளது. இ–மெயிலில் புகார் மனு அனுப்பினோம். ஆனால், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, புகார் மனு வரவில்லை என கூறியுள்ளார். அதனால், நேரடியாக அவரிடம் மனு அளிக்க வந்தோம்; அவர் சந்திக்கவில்லை. அடுத்த நிலை அதிகாரியிடம், மனு அளித்தோம்.

டில்லியில் உள்ள தலைமை தேர்தல் கமிஷனரிடம் நேரடியாக மனு அளிக்க உள்ளோம். விருதுநகரில் மறு ஓட்டு எண்ணிக்கை நடத்த வேண்டும் என்பதே, எங்கள் கோரிக்கை. தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுக்காவிட்டால், நீதிமன்றம் செல்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

News regarding Seeking recounting in Virudhunagar constituency.

தினமணி

7 JUN 2024

# மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் 45 நாள்கள் பாதுகாக்கப்படும்

சத்யபிரத சாகு



சென்னை, ஜூன் 6: மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் தேர்தல் துறையின் வைப்பறைகளில் வைத்து 45 நாள்கள் வரை பாதுகாக்கப்படும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் முடிவடைந்துள்ள நிலையில், தேர்தலுக்குப் பிந்தைய நடவடிக்கைகள் தொடர்பாக தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு சத்யபிரத சாகு வியாழக்கிழமை அளித்த பேட்டி:

அனைத்து மக்களவைத் தொகுதிகளிலும் வாக்கு எண்ணிக்கை மையங்களாக கல்வி நிறுவனங்கள் இருந்தன. வாக்கு எண்ணிக்கை முடிவடைந்த நிலையில், அங்கிருந்து வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு, அருகிலுள்ள வைப்பு அறைகளில் வைக்க வட்டாட்சியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

**வழக்குத் தொடர அவகாசம்:** தேர்தல் முடிவுகளில் அதிருப்தி, சந்தேகங்கள் இருந்தால் அதுதொடர்பான வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் தொடரலாம். இதற்கு தேர்தல் முடிவு வெளிவந்த தேதியில் இருந்து 45 நாள்கள் வரை அவகாசம் அளிக்கப்படும். அதற்குள் அரசியல் கட்சிகள் தங்களது மனுவை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம். நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது, சம்பந்தப்பட்ட தொகுதிக்கான மின்னணு இயந்திரங்கள் உள்பட தேர்தலில் பயன்படுத்தப்பட்ட அனைத்து கருவிகளும் பத்திரப்படுத்தி வைக்கப்படும். தேர்தல் நடைமுறைகள் முடிந்துவிட்டால், தேர்தல் மனுவாக உயர்நீதிமன்றத்தில் மட்டுமே புகார் அளிக்க முடியும். வேட்பாளர்களுக்கான தேர்தல் செலவு கணக்கு இறுதி விவரங்களை முடிவுகள் அறிவிக்கப்பட்டதில் இருந்து 30 நாள்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். தேர்தல் காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பணம், உரிய ஆவணங்கள் அடிப்படையில் திரும்பத் தரப்பட்டு வருகிறது.

**குறைந்த வாக்குகள் ஆய்வு:** தேர்தல் நடைபெற்ற காலத்திலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் பதிவேற்றப்பட்டன. தேர்தல் நடைமுறைகள் முடிந்துள்ள நிலையில், அந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மேலும், பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம், திருத்தம் போன்றவற்றுக்கு தொடர்ந்து விண்ணப்பிக்கலாம்: இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, வாக்காளர் பட்டியலில் திருத்தம், சேர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்பட்டதாக புகார்கள் வந்தவிவகாரத்தில், வேட்பாளரோ, கட்சி சார்பிலோ புகார் அளித்தால், அது தொடர்பாக விசாரணை செய்ய வாக்காளர் பட்டியல் பதிவு அலுவலருக்கு அனுப்பப்படும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாவிட்டால் மீண்டும் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

குறைந்த வாக்குகள் பதிவான தொகுதிகளில் அதற்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்படும். இதற்கு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் உள்ளன. அதன் அடிப்படையில் தொகுதி, வாக்குச்சாவடி வாரியாக ஆய்வு செய்யப்படும். பொதுவாக வாக்குப்பதிவு குறைவுக்கு இடம்பெயர்தலும் காரணமாகக் கூறப்படுகிறது.

மின்னணு இயந்திரங்கள் பயன்பாட்டுக்குப் பின் அவற்றை மீண்டும் பாதுகாப்பாக வைக்க தமிழக தேர்தல் துறையின் சார்பில் ஏற்கெனவே 32 மாவட்டங்களில் வைப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அதில், மாவட்டங்களுக்குள் அடங்கிய சட்டப்பேரவை தொகுதி வாரியாக இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். இதுதவிர, மேலும் 7 மாவட்டங்களில் கிடங்குகள் கட்ட மாநில அரசின் நிதியைப் பெற அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## விக்கிரவாண்டிக்கு இடைத் தேர்தல் எப்போது?

விக்கிரவாண்டி இடைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்ற கேள்விக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு பதிலளித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி காலியான தேதியில் இருந்து 6 மாதங்களுக்குள் இடைத் தேர்தல் நடத்த வேண்டும். இந்த விஷயத்தில் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம்' என்றார்.

The CEO, Tamil Nadu informed that the voting machines used in Lok Sabha Elections will be kept in warehouses for safety for 45 days. Those who want to file case related to Election can file a case in court within 45 days

தினகரன்

ட 7 JUN 2024

2 மாதத்துக்கு மேல் நடைமுறையில் இருந்த

# தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுக்கு வந்தன

**இன்று முதல் அரசு அறிவிப்புகளை வெளியிட தடையில்லை**

சென்னை, ஜூன் 7: நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியான கடந்த மார்ச் 16ம் தேதி முதல் அமலுக்கு வருவதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. தேர்தல் நடத்தை விதிமுறைப்படி, அரசியல் கட்சியினர், பொதுமக்கள் ₹50 ஆயிரத்துக்கு மேல் ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லக்கூடாது. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் பொது நடத்தை விதிகளை கடைப்பிடிப்பது, தேர்தல் கூட்டங்கள் நடத்துவதில் கட்டுப்பாடுகள், ஊர்வலம் செல்வது தொடர்பான விதிமுறைகள், வாக்குப்பதிவு நாளில் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், வாக்குச் சாவடியில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் அனைத்தும் தேர்தல் ஆணையம் அறிவித்தபடிதான் செய்ய வேண்டும்.

முக்கியமாக தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த பிறகு அந்தந்த மாநில ஆளுங்கட்சியினர் எந்த விதமான அரசு அறிவிப்புகள், பதவியேற்பு, அடிக்கல் நாட்டு விழா, பூமி பூஜை, நிதி வழங்குவது போன்ற நிகழ்ச்சிகளையும் செய்ய முடியாது. இதனால் தமிழகத்தில் கடந்த 80 நாட்களாக எந்தவித முக்கிய அறிவிப்புகள், மக்கள் நல திட்டங்களும் அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில், தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிந்து, வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்ட நிலையில், இந்திய தேர்தல் ஆணையர்கள் இந்திய ஜனாதிபதியை நேற்று சந்தித்து 18வது மக்களவை தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு, வெற்றிபெற்றவர்களின் முழு விவ்ரங்களையும் அளித்தனர். இதையடுத்து நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அனைத்தும் நேற்றுடன் முடிவுக்கு வந்துவிட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதையடுத்து, இன்று முதல் தமிழக அரசு உள்ளிட்ட மாநில கட்சிகள் தங்கள் வழக்கமான மக்கள் பணிகளில் ஈடுபடலாம். அரசு உத்தரவுகள் பிறப்பிக்கலாம். தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் நிதி உதவிகளும் வழங்கலாம்.

## 3 மாநிலங்களில் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்

இந்திய தேர்தல் ஆணையம் அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் தலைமை செயலாளர்களுக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது: இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்து வந்தது. தற்போது, அனைத்து மாநிலங்களிலும் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சில மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல், சட்டமன்ற இடைத்தேர்தல் நடந்து முடிந்து, தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டு விட்டது. எனவே நாடு முழுவதும் அமலில் இருந்த தேர்தல் நடத்தை விதிகள் அனைத்தும் விலக்கிக் கொள்ளப்படுகிறது. அதே நேரம் கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் எம்எல்சி பதவிக்கான பட்டதாரிகள், ஆசிரியர்கள் இடைத்தேர்தல் நடைபெற இருப்பதால் அந்த தொகுதிகளில் மட்டும் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்.

Model code of conduct were withdrawn

தினகரன்

7 JUN 2024

### தீப்பெட்டி தோற்றத்தில் பிஸ்கட் சின்னம்

# ஓட்டு கேட்காமலே 14,796 வாக்குகள் பெற்ற சுயேச்சை

### திருச்சி தொகுதியில் ருசிகரம்




திருச்சி, ஜூன் 7: திருச்சி தொகுதியில் தீப்பெட்டி தோற்றத்தில் இருந்த பிஸ்கட் சின்ன குழப்பத்தால் ஓட்டு கேட்காமலே 14,796 வாக்குகளை சுயேச்சை வேட்பாளர் பெற்றார்.

திருச்சி நாடாளுமன்ற தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிட்ட மதிமுக வேட்பாளர் துரை வைகோ வெற்றி பெற்றார். அதே நேரத்தில் வாக்கு எண்ணிக்கையின் போது ஒவ்வொரு சுற்றிலும் சுயேச்சை வேட்பாளர் என்.செல்வராஜ் என்பவர் அனைவரது கவனத்தையும் ஈர்த்து வந்தார். காரணம், ஒவ்வொரு சுற்றிலும் அவர் 700க்கும் அதிகமான வாக்குகளை பெற்றார். இதில் பத்மஸ்ரீ விருது பெற்ற தாமோதரன் உள்ளிட்ட சில முக்கிய சுயேச்சை வேட்பாளர்களும் இருந்த நிலையில் செல்வராஜ் மட்டும் ஒவ்வொரு சுற்றிலும் கூடுதலான வாக்குகள் பெற்று வந்தது அனைவருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. இவருக்கு மட்டும் மக்கள் மத்தியில் இவ்வளவு செல்வாக்கா என அனைவரும் குழப்பத்தில் இருந்தனர். தேர்தலில் எந்த பிரசாரமும் செய்யாமலே மொத்தம் 14,796 வாக்குகள் செல்வராஜ் பெற்றார்.

குறைந்தபட்சம் திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 1,788 வாக்குகளும், அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 3,279 வாக்குகளும் பெற்றிருந்தார். இறுதியில் செல்வராஜுக்கு 5வது இடம் கிடைத்தது. இவருக்கு தேர்தல் ஆணையம் பிஸ்கட் சின்னம் ஒதுக்கியிருந்தது.

மதிமுக சார்பில் போட்டியிட்ட துரை வைகோவுக்கு தீப்பெட்டி சின்னம் ஒதுக்கப்பட்டது. 2 சின்னமும் செவ்வக வடிவில் இருந்தன. தீக்குச்சியை தவிர்த்து பார்த்தால் ஒரே மாதிரியாக இருக்கும். இதனால் இந்த சின்னம் குழப்பத்தில் அவருக்கு கூடுதல் வாக்கு கிடைத்திருக்கலாம் என மதிமுக வின் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் தெரிவித்தனர். சுயேச்சை வேட்பாளர்களில் அதிக வாக்குகள் பெற்ற செல்வராஜ், நிதி நிறுவன ஊழியர். இவர் வேட்பு மனு தாக்கல் செய்ததை தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு மட்டுமே பகிர்ந்தார். ஆனால் தேர்தல் பிரசாரமும் செய்யவில்லை. வீடு, வீடாக ஓட்டும் கேட்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

In Tiruchy constituency an independent candidate got 14,796 votes

தினகரன்
7 JUN 2024

விருதுநகர் தொகுதியில்

# மறு வாக்கு எண்ணிக்கை நடத்துவது குறித்து உயர்நீதிமன்றமே முடிவு செய்யும்

**தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்**

சென்னை, ஜூன் 7: சென்னை, தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

தேர்தல் நடைமுறைகள் முடிந்துவிட்டதால், தேர்தல் தொடர்பான மனுவை உயர்நீதிமன்றத்தில் மட்டுமே புகாராக அளிக்க முடியும். தற்போது விருதுநகர் தொகுதி மறுவாக்கு எண்ணிக்கை தொடர்பாக தேமுதிகவில் இருந்து நேற்று பிற்பகல் சென்னையில் புகார் அளிக்கப்பட்டது. விருதுநகர் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம்தான் இதுதொடர்பாக புகார் அளிக்க வேண்டும். ஆனாலும், இது தேர்தல் தொடர்பான புகார் என்பதால் உயர்நீதிமன்றத்தின் மூலம் தான் தீர்க்கப்பட வேண்டும். வேட்பாளர்களுக்கான தேர்தல் செலவு கணக்கு என்பது தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதில் இருந்து 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.



தேர்தல் காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பணம், உரிய ஆவணங்கள் அடிப்படையில் திரும்பத் தரப்பட்டு வருகிறது.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் 6 மாதங்களுக்குள் நடத்தப்பட வேண்டும். தேர்தல் நடைபெற்றபோதும் புதிய வாக்காளர்கள் தங்கள் பெயர்களை சேர்க்க விண்ணப்பித்திருப்பார்கள். தற்போது தேர்தல் நடைமுறைகள் முடிந்துள்ள நிலையில், இப்போதும் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம், திருத்தம் போன்றவற்றுக்கு விண்ணப்பிக்கலாம். வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் மீண்டும் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

மின்னணு இயந்திரங்கள் பயன்பாட்டுக்குப் பின் அவற்றை மீண்டும் பாதுகாப்பாக வைக்க தேர்தல் ஆணையம் சார்பில் ஏற்கெனவே 34 மாவட்டங்களில் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. அதில் மாவட்டங்களுக்குள் அடங்கிய சட்டப்பேரவை தொகுதி வாரியாக இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். இதுதவிர, மேலும் 6 மாவட்டங்களில் கிடங்குகள் கட்ட ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டு, மாநில அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**குறைந்த வாக்குகள் பதிவானது குறித்து வாக்குச்சாவடி வாரியாக ஆய்வு**

குறைந்த வாக்குகள் பதிவான தொகுதிகளில் அதற்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்படும். இதற்கு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் உள்ளன. அதன் அடிப்படையில் தொகுதி, வாக்குச்சாவடி வாரியாக ஆய்வு செய்யப்படும். பொதுவாக வாக்குப்பதிவு குறைவுக்கு வாக்காளர்களின் இடம்பெயர்தலும் காரணமாக கூறப்படுகிறது. இரட்டை பதிவுகள் பொறுத்தவரை தற்போது தொகுதிக்குள் மட்டுமே சோதனை செய்யும் வசதி உள்ளது. இனி தேசிய அளவிலும் ஒரு நபருக்கு பல வாக்காளர் பட்டியலில் பதிவு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்கான நடைமுறை வரவேண்டும். மாநிலத்துக்குள் இந்த நடைமுறை குறித்து சோதனை நடத்தப்பட்டது. ஆனால், பெரிய அளவிலான எண்ணிக்கை இருந்ததால் தேர்தல் நேரத்தில் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள இயலவில்லை. தற்போது தேர்தல் நடைமுறை முடிந்துவிட்டதால், இனி இதுகுறித்த ஆய்வுகளை தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

For re-counting in Virudunagar constituency High court should take decision – CEO, Tamil Nadu